2. விதி 110—ன்கீழ் அறிக்கைகள்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *பேரவை விதி 110—ன்படி இரண்டு அறிக்கைகளை அளிக்கவேண்டுமென்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அனுமதி கோரியுள்ளார்கள். அனுமதியளிக்கப்படுகிறது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.*

(அ) பி.டி. பருத்தி சாகுபடி பரவலாக்கும் நடவடிக்கையைக் கைவிடுதல் குறித்து மாண்புமிகு முதல்மைச்சரின் அறிக்கை

மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தச் சட்டமன்றப் பேரவையில் 4—8—2011 அன்று தாக்கல் செய்யப்பட்ட 2011–2012 ஆம் ஆண்டிற்கான திருத்த வரவு செலவுத் திட்ட நிதிநிலை அறிக்கையில், "முன்னோடி தொழில்நுட்பங்களான திருந்திய நெல் சாகுபடி திட்டம்; நவீன முறையில் கரும்பு உற்பத்தித் திறனை உயர்த்தும் திட்டம்; துல்லிய பண்ணையம்; பி.டி. பருத்தியைப் பரவலாக்குதல்; பயறு வகைகள், எண்ணெய்வித்துக்கள் ஆகியவற்றில் உகந்த பயிர் மேலாண்மையைக் கடைப்பிடித்தல்; பசுமைக் குடில்; துல்லிய பண்ணையம் முறைகளில் காய்கறிகளைப் பயிரிடுதல்; தோட்டக்கலைப் பயிர்களுக்கான அடர் நடவுமுறை போன்றவை தீவிரமாக பரவலாக்கப்படும்" என்று குறிப்பிடப்பட்டிருந்தது.*

இந்த மாமன்றத்தில் பேசிய மாண்புமிகு உறுப்பினர்கள் சிலர், பி.டி. இரகப் பருத்தி பயிரிடுவதில் பல பிரச்சினைகள் இருப்பதால், இதனை அரசு ஊக்குவிக்கக்கூடாது என்ற கருத்தினைத் தெரிவித்திருந்தனர். விவசாயிகளும், அரசளவில் பி.டி. இரகப் பருத்தி பயிரிடுவதை ஊக்குவிக்கக்கூடாது என்று கோரிக்கை விடுத்துள்ளனர்.

2002 ஆம் ஆண்டு, மத்திய அரசு பி.டி. இரகப் பருத்தியினை விவசாயிகள் சாகுபடி செய்வதற்காக Genetic Engineering Approval Committee *மூலம் அனுமதி அளித்து, இன்று பல மாநிலங்களில் பரவலாக சாகுபடி செய்யப்பட்டு வருகிறது. பி.டி. பருத்தியின்மூலம் அதிக இலாபம் பெற முடியும் என்பதால், இலாப நோக்கோடு தனியாரிடம் பி.டி. இரக விதைகளை வாங்கி தமிழக விவசாயிகளும் பயிரிட்டு வருகிறார்கள். எனவேதான், நிதிநிலை அறிக்கையில் பி.டி. இரகப் பருத்தி சாகுபடி பரவலாக்கப்படும் எனக் குறிப்பிடப்பட்டிருந்தது.*

எனினும், மரபணு மாற்றம் செய்யப்பட்ட பருத்தி என்பதாலும், விவசாயிகளுக்கு நிச்சயமான பலன் அளிக்கும் என்ற உறுதி இல்லாததாலும், இதனை அரசளவில் பரவலாக்கக் கூடாது என்ற மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர்கள் மற்றும் விவசாயிகளின் கருத்தினை ஏற்று, பி.டி. பருத்தி சாகுபடியைப் பரவலாக்கும் எந்த நடவடிக்கையையும் இந்த அரசு மேற்கொள்ளாது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

(ஆ) உயர்நிலைப் பள்ளிகளை மேல்நிலைப் பள்ளிகளாக நிலை உயர்த்துதல் குறித்து மாண்புமிகு முதலமைச்சரின் அறிக்கை

மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கு அடித்தளமாக அமைவது மனித வளம்தான். மனித வள மேம்பாட்டில் முக்கியப் பங்காற்றுவது கல்வி. கல்வியில் மேம்பட்ட சமுதாயத்தால்தான் வளர்ச்சிக் குறியீடுகளை எளிதாக அடைய இயலும். அந்தவகையில்தான், எனது தலைமையிலான அரசு கல்வி வளர்ச்சிக்கு அதிக முக்கியத்துவம் அளித்து வருகிறது.

கல்வி வளர்ச்சியை மேம்படுத்தும் நடவடிக்கையின் ஓர் அங்கமாக, மாநிலத்தில் உள்ள 100 அரசு, மாநகராட்சி மற்றும் நகராட்சி உயர்நிலைப் பள்ளிகளை மேல்நிலைப் பள்ளிகளாக நிலை உயர்த்த நான் ஆணையிட்டுள்ளேன் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

முற்பகல் 10–05

மேல்நிலைப் பள்ளிகளாக நிலை உயர்த்தப்படும் பள்ளிகளில், அறிவியல் பிரிவு மட்டும்தான் இதுவரை துவக்கப்பட்டு வந்தது. மேலும், உயர்நிலைப் பள்ளிகள், மேல்நிலைப் பள்ளிகளாக நிலை உயர்த்தப்படும்போது, உயர்நிலைப் பள்ளி தலைமை ஆசிரியர் பணியிடங்கள், மேல்நிலைப் பள்ளி தலைமை ஆசிரியர் பணியிடங்களாகத் தரம் உயர்த்தப்படுவதுடன், ஆங்கிலம், கணிதம், இயற்பியல், வேதியியல் மற்றும் உயிரியல் ஆகிய 5 முதுகலைப் பட்டதாரி ஆசிரியர் பணியிடங்களும் ஒப்பளிக்கப்பட்டு வந்தன.

தற்போது, நிலை உயர்த்தப்படும் 100 பள்ளிகளிலும், அறிவியல் பிரிவுடன் கலைப் பிரிவும் துவக்க இந்த அரசு முடிவு செய்துள்ளது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத்